**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102034

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 9/17 Date: நாள் 20. 11. 2017

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10. 11. 2017 Date to : நாள் வரை 16. 11. 2017
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 hrs Time to : நேரம் வரை 15.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20. 11. 2017 Time : நேரம் காலை 09. 15 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written / Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 3 கி.மீ. வடக்கே
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம் விருதுநகர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. M. அர்ஜுன் சிங் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் செல்லதுரை ஆறுமுகம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1982 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஆட்டோ ஓட்டுனர் (g) Address : முகவரி எண். 11 சின்னப்பள்ளி வாசல் தெரு, விருதுநகர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. அருள் சேகர், வருவாய் ஆய்வாளர், நகராட்சி அலுவலகம் விருதுநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

நான் இன்று 20.11.2017 ஆம் தேதி காலை 09.15 மணிக்கு அலுவலக பணியில் இருந்த போது விருதுநகர் க.எண்.11 சின்னபள்ளி வாசல் தெருவில் வசித்து வரும் திரு. [illegible] (லேட்) மகன் திரு. அப்துல் சமது (வயது 35) என்பவர் என்னிடம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று மேற்படி புகார் மனுவின் மீது முதல் நிலை விசாரணை மேற்கொள்ள அனுமதி வேண்டி சென்னை ஊ.த.துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப அனுமதி பெற்று மேற்படி புகார் மனுவின் அடிப்படையில் PE 393/2017/LB/பல [முதல் நிலை விசாரணை மேற்கொள்ளப்படுகிறது]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. [illegible] பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Abdul Samad 20/11/2017

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[illegible signature]

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.11.2017 15.45 hrs

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்

விருதுநகர் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.9/2017ன் தொடர்ச்சி

நாள்.20.11.2017ஆக பதிவு செய்து, விசாரணை செய்து, அந்த முதனிலை விசாரணையில் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதாக இன்று (20.11.17) தெரியவந்ததால், முதனிலை விசாரணையை முடித்து, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தெரிவித்துவிட்டு, இன்று 20.11.17ஆம் தேதி 14.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/17 பிரிவு 7 ஊ.த.ச., 1988ன்படி எதிரி திரு.அமுதசேகர், வருவாய் ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், விருதுநகர் என்பவர்மீது வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்:- M.அப்துல்சமது (35/17),த/பெ மூகம்மது ஆதம், 11 சின்னப் பள்ளிவாசல் தெரு, விருதுநகர். பெறுநர்:- உயர்திரு ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, நான் மேலே சொன்ன முகவரியில் எனது தாய் மற்றும் தம்பி குடும்பத்துடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறேன். நான் சொந்தமாக ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்திவருகிறேன். கடந்த 12.03.2017ஆம் தேதி எனது தாயார் பெயரில் விருதுநகர் டவுண், சர்வே வார்டு எண் : 3, பெருமாள் கோவில் தெருவில் தென்சரகில் T.S.நம்பர் 181ன் பாகம் கதவு எண்.31ல் மேல் பகுதியில் அமைந்துள்ள வீட்டை விருதுநகர் வட்டம் அல்லம்பட்டி கிராமம் இராமன் தெரு கதவு எண்.6/32ல் வசித்துவரும் லேட் சுப்பையா நாயக்கர் மகன் தர்மராஜ் என்பவரிடமிருந்து விருதுநகர் சார் பதிவக கிரையப் பத்திரம் ஆவண எண்.702/2017ன் மூலம் கிரையம் பெறப்பட்டது. அவ்வாறு எனது தாயார் பெயரில் கிரையம் பெற்ற விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட மேற்படி வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு பெயர் மாற்றம் செய்வதற்காக நான் விருதுநகர் நகராட்சி அலுவலகத்திற்கு கடந்த 03.05.2017ஆம் தேதி மதியம் சென்று, நகராட்சியில் விசாரித்தபோது, எனது தாயார் பெயரில் வாங்கிய சொத்துவரி விதிப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு, முதலில் மேற்படி வீட்டிற்கு பாதாளச்சாக்கடை மற்றும் ரோடு கட்டிங் சார்ஜ்க்குரிய பணம் கட்டவேண்டும் என்றும் அவ்வாறு அந்த பணத்தை கட்டினால்தான் எனது தாயார் பெயரில் வாங்கிய வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்தை பெறுவார்கள் என்றும் கூறினார்கள். ஆகையால் மறுநாள் 04.05.2017ஆம் தேதி காலை 9.00 மணிக்கு நான் விருதுநகர் நகராட்சி அலுவலகம் சென்று, அங்குள்ள வசூல் மையத்திலிருந்த நகராட்சி ஊழியரிடம் பாதாளச்சாக்கடை புதிய இணைப்புக்குரிய கட்டணம் ரூ.4050/- மற்றும் ரோடு கட்டிங்குரிய

ரூ.100/- ஆகியவற்றை செலுத்தி அதற்குரிய இரண்டு இரசீதுகளை பெற்றுக்கொண்டு, மேற்படி வீட்டிற்கான பாதாளச்சாக்கடை புதிய இணைப்பு கேட்டு 03.05.2017ஆம் தேதியிட்ட எனது தாயார் பெயரிலுள்ள விண்ணப்பத்துடன் இணைத்து, அதே வசூல் மையத்திலிருந்த நகராட்சி ஊழியரிடம் கொடுத்தேன். அதைத்தொடர்ந்து மேற்படி எனது தாயார் பெயரில் வாங்கிய வீட்டிற்கான சொத்துவரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்வதற்காக நகராட்சியில் செலுத்தக்கூடிய பணம் ரூ.100/- அதே வசூல் மையத்தில் செலுத்தி, அதற்கான இரசீதையும் பெற்றுக் கொண்டு, அந்த இரசீதின் ஒரு நகலை எனது தாயார் பெயரில் வாங்கிய வீட்டிற்கான சொத்துவரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்வதற்கான 03.05.2017ஆம் தேதியிட்ட எனது தாயார் பெயரிலுள்ள விண்ணப்பத்துடன் இணைத்து கொடுத்தேன். பின்னர் மேற்படி விண்ணப்பம் தொடர்பாக கடந்த 5 மாதங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததால், கடந்த 10.11.2017ஆம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் விருதுநகர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, எனது தாயார் பெயரில் நான் கொடுத்த விண்ணப்பத்தின்மீது முதலில் நடவடிக்கை எடுக்கக்கூடிய பில் கலெக்டரை சந்தித்து கேட்டபோது, அவர் வருவாய் ஆய்வாளரை சந்திக்கும்படி கூறிவிட்டார். ஆகையால் மேற்படி வீடு உள்ள பகுதிக்கு வருவாய் ஆய்வாளராக இருக்கும் திரு.அமுதசேகர் என்பவரை அவரது இருக்கைக்குச் சென்று சந்தித்து எனது தாயார் பெயரில், நான் கொடுத்த மேற்படி விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் ஆமா உங்க விண்ணப்பம் வந்திருக்கு, அந்த விண்ணப்பம் கொடுத்து ரொம்ப நாளாச்சு என்றும், இவ்வளவு நாளா ஏன் அந்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்காமல் இருந்திட்டிங்க என்றும் கேட்டார். அதற்கு நான் இந்த விண்ணப்பம் கொடுத்தபிறகு எனது தகப்பனார் இறந்த சூழ்நிலையில் இருந்ததால் அதனால் குடும்ப சூழ்நிலையினால நகராட்சியில் வந்து உங்ககிட்ட கேட்கமுடியாம போச்சு சார் என்றும் சொன்னேன். அதற்கு அவர் ஓ அப்படியா அதனாலதான் வராம இருந்திட்டிங்களா பரவாயில்ல என்று சொல்லி உனது தாயார் பெயரில் கொடுத்த சொத்துவரிவிதிப்பு பெயர் மாற்றம் சம்பந்தமாக கொடுத்த விண்ணபத்தின்மீது நடவடிக்கை எடுத்து வருவாய் அதிகாரிக்கு அனுப்பிவைப்பதற்கு எனக்கு ரூ.3000/- தரவேண்டும் என்றும், அப்படியே ரூ.3000/- கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் நீங்க கொடுத்த விண்ணபத்தின்மீது நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறினார். அதற்கு நான் ஐயா நான் ஆட்டோ ஓட்டி கஷ்டப்பட்டு தொழில் செய்து கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வருகிறேன். நான்தான் குடும்பம் முழுவதையும் பராமரித்து வருகிறேன் என்றும், வேறு வருமானம் எதுவும் கிடையாது என்றும் அதனால நீங்க பார்த்து செய்யுங்க சார் என்றும் சொன்னேன். அதற்கு மேற்படி வருவாய்

ஆய்வாளர் திரு.அமுதசேகர் இல்ல நிங்க நான் கேட்ட ரூ.3000/-ஐ ரெடிபண்ணி கொண்டுவந்து கொடுத்தால்தான் நிங்க கொடுத்த விண்ணப்பம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறிவிட்டார். பின்னர் நான் வேறுவழியின்றி சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மறுபடியும் மேற்படி விண்ணப்பம் சம்பந்தமாக கடந்த 16.11.2017ஆம் தேதி மதியம் சுமார் 3.30 மணிக்கு விருதுநகர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று வருவாய் ஆய்வாளர் திரு.அமுதசேகர் அவர்களை அவர இருக்கையில் வைத்து சந்தித்து அந்த விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அப்போதும் அவர் என்னங்க பணத்தை ரெடிபண்ணிட்டு வந்திங்களா, எங்கே பணம் என்று கேட்டார். அதற்கு நான் இல்ல சார் நான் பணம் கொண்டுவரல சார் நீங்க பார்த்து செஞ்சு கொடுங்கசார் என்று கேட்டேன். அதற்கு அவர், ஏங்க, என்னங்க இது எல்லாம் சொத்துவரிவிதிப்பு பெயர் மாற்றம் சம்பந்தமாக வரவுங்க எல்லாரும் இந்த பணத்தை ரெடி பண்ணித்தான் கொண்டுவாராங்க என்றும், இது வழக்கமான ஒன்றுதான் என்றும், நீங்க ஒன்னும் புதுசா செய்யலங்க என்றும் சொல்லி, நீங்க வேண்டுமானால் ரூ400/-ஐ குறைச்சிக்கிட்டு, ரூபாய் 2600/-ஐ கொண்டுவாங்க என்றும், இந்த ரூபாய் ரூ.2600/-ஐ கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் நீங்க கொடுத்த விண்ணபத்தின்மீது நடவடிக்கை எடுப்பேன் என்று கறாராகக் கூறிவிட்டார். ஆகையால் நானும் அவரிடம் வேறுவழியில்லாமல் சரிங்க சார், அந்த பணம் ரூ.2600/-ஐ ரெடி பண்ணிட்டு வரேன் சார் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின் வீட்டிற்கு வந்து யோசனை செய்துபார்த்ததில் நியாயமாக அவர் செய்யவேண்டிய அரசு வேலைக்கு, நாம ஏன் லஞ்சப்பணம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து, லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாமல் இன்று 20.11.2017ஆம் தேதி தங்களிடம் வந்து, எனது தாயார் பெயரில் உள்ள வீட்டிற்கான சொத்துவரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்ய என்னிடம் ரூ.2600/- லஞ்சம் கேட்ட விருதுநகர் நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.அமுதசேகர் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த எழுத்துமூலமாக புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு (Sd) M.Abdul samad, 20/11/2017.

Submitted,

Received this petition on 20.11.2017 at 09.15 hrs and sent it to the Director, DVAC, Chennai seeking permission to register PE in this regard. (Sd). R.Boominathan, 20/11/17 Insp of Police, V&AC, VNR

Permission obtained from the Director, DVAC, Chennai to register PE vide PE.393/2017/LB/VN at 10.30 hrs and registered as said No.16/2017 in V&AC, Virudhunagar PE Register. (Sd). R.Boominathan, 20/11/17 Insp of Police, V&AC, VNR

Conducted confidential enquiry on PE.393/2017/LB/VN and found prima-facie for the mentioned allegation since the registration of regular case is warranted in the prima-facie, the matter is intimated orally to the SP/SR, V&AC, Chennai-16 and registered a case in Virudhunagar V&AC Cr.No.9/2017 u/s 7 of PC.Act, 1988 on the complaint of the complainant Tr.Abdulsamadu (35/17), S/o.Late.Mohamed Atham, No.11, Chinnapallivasal St., Virudhuangar on 20.11.2017 at 14.00 hrs. The Original FIR along with complaint is submitted to the Hon'ble CJM/Special Judge, Srivilliputhur and the copies submitted to the concerned officers. (Sd). R.Boominathan, 20/11/17 Insp of Police, V&AC, VNR

Insp of Police, V&AC, VNR.